# இந்து கலாசார சுற்றுலாவியல் - வலிகாமம் மேற்கினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

துஹயா பேரானந்தம்[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*சமகால உலகில் வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளில் சுற்றுலாத்துறையானது பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கு அதிகளவிலான பங்களிப்பினைச் செய்கின்ற துறையாக மிளிர்ந்துவருகின்றது. ஒருவர் வாழ்ந்து வரும் இடத்திலிருந்து விலகி, குறுகிய கால அடிப்படையில் பயணம் செய்து அவற்றினூடாக மனநிறைவினைப் பெற்றுக் கொள்ளுதல் சுற்றுலா எனப்படும். இச்சுற்றுலாவியலானது பல்வகைப்பட்டதாகக் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் சில வகைகளே முக்கியமான சுற்றுலாவிற்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலா வகைகளுள் ஒன்றாகவே கலாசாரச் சுற்றுலா அமைகிறது. பிறநாட்டு மக்களது வரலாறு, நுண்கலைகள், மரபுரிமைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பயணமே இதுவாகும். இச்சுற்றுலாவியலானது கலாசாரம், பாரம்பரியம், சுற்றுச்சூழல் போன்ற எண்ணக்கருக்களை மையமாகக் கொண்டே செயற்பட்டுவருகிறது. அந்தவகையில் இலங்கை போன்ற வளர்முகநாடுகளில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறையானது குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை நல்கிவருகிறது. இலங்கையின் சென்னியாகத் திகழும் யாழ் குடாநாடானது பண்பாடும் பாரம்பரியமும் தழுவிய இடமாகவும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகவும் திகழ்கின்றது. இலங்கைப் பயணிகள் மட்டுமன்றி வெளிநாட்டுப் பயணிகளும் பண்பாட்டுச் சுற்றுலா நோக்கில் இங்கே சுற்றுப்பயணத்தை மேற்கொள்கின்றனர். இப்பண்பாட்டுச் சுற்றுலாவுடன் இணைந்ததாக மரபுரிமைச் சுற்றுலாத்துறையும் இங்கு குறிப்பிடத்தக்கவகையில் செல்வாக்குப் பெற்றுள்ளது. அந்தவகையில் யாழ் குடாநாட்டில் அமையப் பெற்றுள்ள வலிகாமம் மேற்குப் பிரதேசத்தை மையப்படுத்தி, அப்பிரதேச மக்களது பண்பாட்டினை பிரகடனப்படுத்தும் மரபுரிமைச்சின்னங்கள், அப்பண்பாட்டின் நிலைக்களங்களாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களான பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயில், பறாளைவிநாயகர் ஆலயம், துணைவி புராதன ஆலயம், இராமாயண கதையுடன் தொடர்புடைய பிதிர்கடன் செய்யும் புனிதத்தீர்த்தத் தலமான திருவடிநிலை போன்ற ஆலயங்களும் இக்கட்டுரையில் ஆய்வுசெய்யப்படுகின்றன. இதற்காக களஆய்வின் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகள், வலிமேற்குப் பிரதேச செயலகத்தின் கலாசாரக் கிளையிலிருந்து பெறப்பட்ட கையேடு என்பன முதன்மை மூலங்களாக அமைகின்றன. அத்துடன் வலிமேற்கின் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஆலயங்கள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், கும்பாபிஷேக மலர்கள், வடமாகாண சுற்றுலா வழிகாட்டல் கையேடு மற்றும் இணையப்பக்கங்கள் என்பன இந்த ஆய்வின் துணைமை மூலங்களாக அமைகின்றன. யாழ்ப்பாணத்தின் வலிமேற்கு பிரதேசத்திலுள்ள இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாத்துறைக்குச் சாதகமான இடங்களினை இனங்கண்டு அதனைப் பண்பாட்டுச் சுற்றுலாத்துறைக்குரிய இடமாக வெளிக்கொணர்தலே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இந்த ஆய்வானது அடிப்படையில் களஆய்வாகவே அமைகின்றது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரலாற்று ஆய்வுமுறை, விபரண ஆய்வுமுறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** இந்துக்கலாசாரச் சுற்றுலா, இந்து ஆலயங்கள், வலிமேற்கு, யாழ்ப்பாணம்

[1] *இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

ananthamthurka91@gmail.com

**ஆய்வு அறிமுகம்**

இலங்கை நாடானது சுற்றுலாப்பயணிகளின் கவனத்தை ஈா்க்கும் வகையில் மிகச்சிறந்த வரலாற்றுப் பாரம்பரியத்தையும் பண்பாட்டினையும் கொண்டு விளங்கி வருகின்றது. இலங்கையின் பல பிரதேசங்கள் சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய வகையில் அமையப்பெற்றுள்ளன. அவ்வாறான சுற்றுலாத்தளங்களில் யாழ்பிரதேசமும் முக்கியத்துவம் பெறுகின்றது. யாழ்ப்பாணமானது சைவப்பண்பாடும் பாரம்பரியமும் மிக்க இடமாக வரலாற்றுக்காலந்தொட்டு விளங்கிவருகின்றது. யாழ்பிரதேசத்திற்கு சுற்றுலா பயணங்களினை மேற்கொள்பவா்கள் பண்பாட்டு சுற்றுலா கருதியே தமது பயணங்களினை மேற்கொள்கிறாா்கள். சுதேசிகள் மட்டுமன்றி அந்நியா்களும் யாழ் மண்ணின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை அறிந்து கொள்வதற்காகவே இங்கு சுற்றுலாப்பயணங்களினை மேற்கொள்கிறாா்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பண்பாட்டுச் சுற்றுலாவியலில் மக்களது வரலாறு, நுண்கலைகள், அவற்றோடு இணைவாக ஆன்மிகச்சின்னங்கள், தத்துவங்கள், பழக்கவழக்கங்கள் போன்றன உள்ளடங்குகின்றன. இத்தகைய பண்பாட்டிற்கெல்லாம் அடிநாதமாகவும் பண்பாட்டின் அடையாளமாகவும் விளங்கும் இந்து ஆலயங்களும் இவ் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாவில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் ஆரம்பகாலத்தில் இந்து ஆலயங்கள் தோற்றம் பெற்றே, அதனை அண்டியே குடியிருப்புக்கள், ஊா்கள் தோற்றம் பெற்றன. இதன் பின்னணியிலேயே தான் மக்களது வாழ்வியற் பண்பாட்டுருவாக்கமானது தோற்றம் பெற்றன. அந்த வகையில் யாழ் குடாநாட்டில் அமையப்பெற்றுள்ள வலி மேற்குப்பிரதேசத்தில் இந்துப்பண்பாட்டுச்சுற்றுலாவிற்குரிய பல மையங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இந்துப்பண்பாட்டுச்சுற்றுலாவினை மேற்க்கொள்பவா்களை கவரும் வகையில் சுழிபுரம் பறாளாய் விநாயகா் ஆலயம், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம், திருவடி நிலை புனிதத்தீா்த்தம், துணைவி புராதன ஆலயம், சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரம் போன்ற இந்து ஆலயங்கள் அமையப்பெற்றுள்ளன. இவற்றுடன் மக்களது வாழ்வியலை பறைசாற்றும் வகையிலுள்ள மரபுரிமைச் சின்னங்களும் சுற்றுலாவியலில் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த வகையில் அப்பிரதேச மக்களால் பயன்படுத்தப்பட்ட வாழ்வியல் எச்சங்கள் இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவும் அம்மக்களது பண்பாட்டு வாழ்வியலின் அடையாளங்களாகக் காணப்படுகின்றன. இம்மரவுரிமைச் சுற்றுலாவியலும் பண்பாட்டுச் சுற்றுலாவியலுடன் இணைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இவ்விரண்டினையும் இணைந்த வகையில் பாா்வையிடுவதற்காகவே சுற்றுலாப்பயணிகளால் பண்பாட்டுச் சுற்றுலாவானது மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றின் அடிப்படையிலேயே இந்த ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

## சுற்றுலாவியல் அறிமுகம்

சுற்றுலா என்பது மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு ஓய்வினை கழிப்பதற்காக, பொழுது போக்கிற்காக, கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றிற்காக மேற்க்கொள்ளப்படுகின்ற பயணமாகும் (சந்திரசேகரம்,செ., முகமட் முஸ்தபா,ஏ.எம்., சசிவதனி,த., 2013:07). ஓய்வு என்ற அடிப்படையிலேயே இச்சுற்றுலாத்துறையானது தோற்றம் பெற்றது. ஓய்வு என்பது மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். உற்பத்தித் தேவைகளில் ஈடுபடல், நீண்டநேர உழைப்பு போன்றவற்றுடன் புறச்சூழல்களால் ஏற்படும் உளவியல் தாக்கம், மன அழுத்தங்கள் என்பன ஓய்வின் தேவையை ஏற்படுத்துகின்றன. ஓய்வு மனிதர்களுக்கு உடல் உளம் சார்ந்த ஒரு அத்தியாவசிய தேவையாகும். இவ்வோய்வினைப் பயனுள்ளதாக ஆக்குவதற்கு மேற்கொள்ளப்படுவதே சுற்றுலாவாகும். அவ்வாறான சுற்றுலாவானது பலவகைப்பட்டதாகக் காணப்படுகின்றது. அதாவது, துணிகரச்சுற்றுலா, விவசாயச்சுற்றுலா, வாணிபச்சுற்றுலா, சமூகச்சுற்றுலா, ஆரோக்கியச்சுற்றுலா, இன்பச்சுற்றுலா, கல்விச்சுற்றுலா, சூழல் சுற்றுலா, நிலைத்துநிற்கும் சுற்றுலா, சமய ஆன்மிகச்சுற்றுலா, பண்பாட்டுச்சுற்றுலா, மரபுரிமைச்சுற்றுலா என்பனவாகும். இவற்றுள் முக்கியமான சுற்றுலா வகையாக பண்பாட்டுச் சுற்றுலாவானது காணப்படுகின்றது.

பண்பாட்டுச் சுற்றுலாவியல் என்பதில் பண்பாடு என்ற சொல்லின் பொருளினை ஆராய்தல் பொருத்தமானதாகும். பண்பாடு என்ற பதம் தமிழில் ஆரம்ப காலங்களில் பண்பு,சால்பு, சான்றாண்மை, பண்புடைமை போன்ற சொற்களினால் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்பாடு என்றால் ஓர் இனத்தவரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச்சட்டங்கள், சமயங்கள், சமயவழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை மரபுகள், அரசியல் அமைப்புகள், ஆடை அணிகலங்கள், திருவிழாக்கள், உணவுமுறைகள், பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் ஆகியவற்றைக் குறிக்கும் (சிவேசன்,எஸ்., 2018:51). இத்தகைய விடயங்களின் உள்ளடக்கமாகவே இந்துப்பண்பாடானது மிளிர்கின்றது. இவ்வம்சங்களைக் கொண்டிலங்கும் பண்பாட்டுச் சுற்றுலாவானது எல்லோராலும் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றுலாவியலாக பிரபல்யமடைந்து வருகின்றது. பண்பாட்டுச் சுற்றுலாவின் வரையறையினை நோக்குதல் இவ்வாய்வின் போக்கிற்குப் பொருத்தப்பாடாகும்.

> "பிறநாட்டு மக்களது வரலாறு, நுண்கலைகள், தத்துவங்கள்,
> பழக்கவழக்கங்கள், பண்பாடு, அறிவியல் வளர்ச்சி மற்றும் கல்வி
> போன்றவற்றை காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பயணம்"

(சந்திரசேகரம்,செ., முகமட் முஸ்தபா,ஏ.எம்., சசிவதனி,த., 2013:34)

அதாவது இச்சுற்றுலாவின் வாயிலாக மக்களின் அல்லது சமூகத்தினுடைய தொன்மைகளைப்பற்றி அறிந்து கொள்ளமுடிகிறது. இப்பண்பாட்டுச் சுற்றுலாவுடன் இணைந்ததாக மரபுரிமைச்சுற்றுலாவும் காணப்படுகின்றது.

> "ஒரு சமூகத்தின் வரலாறு, கலாசாரம், வாழ்வியல் அம்சங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதே மரபுரிமையாகும். இது அச்சமூகத்தின் தனித்துவத்தை சுட்டிக்காட்டுவதனால் மரபுரிமை எனக்கூறப்படுகின்றது.
> இச்சுற்றுலாப்பாரம்பரியத்தை அறிந்து கொள்ளல்,
> மரபுரிமை மூலங்களை அறிதல், மரபுரிமை சின்னங்களைப்பாதுகாத்தல் போன்ற நோக்கங்களுக்காக மேற்க்கொள்ளப்படுகின்றது"
>
> (சந்திரசேகரம்,செ., முகமட் முஸ்தபா,ஏ.எம்., சசிவதனி,த., 2013:35)

இத்தகைய சுற்றுலா மூலம் சமகால மக்களுக்கே உரித்தான வாழ்க்கை முறைகள், வாழும் பண்பாடுகள் (Living Culture), சம கால கலைகள், இசைக்கருவிகள், இசைகள், ஓவியங்கள் போன்ற நவீன காலத்துப் பண்பாட்டு விழுமியங்களின் அனுபவ ரீதியான திருப்தியினை பெற்றுக் கொள்வதற்கு சுற்றுலாப்பயணிகள் பண்பாட்டுத் தனித்தன்மை வாய்ந்த இடங்களுக்கு பயணித்தல் பண்பாட்டு சுற்றுலாவாகும். மேலும் மரபுரிமை சுற்றுலாவானது பண்டைக்கால நினைவுச்சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்படுகிறது (சிவேசன்,எஸ்., 2018:51-52). இவற்றின் அடிப்படையிலேயே இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாவியலானது இவ்வாய்வுக்கட்டுரையில் நோக்கப்பட்டுள்ளது.

## ஆய்வுப்பிரதேச அமைவிடம்

இலங்கைத்தீவின் சென்னியாக அமையப்பெற்றுள்ள யாழ்குடாநாடானது வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் என நான்கு பகுதிகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இவற்றுள் வலிகாமமானது குடாநாட்டின் மேற்குப்பகுதியில் அமையப்பெற்றுள்ளது. இதன் வடக்கே இந்துமாகடலும், மேற்கே தீவுப்பகுதிக்கும் குடாநாட்டிற்கும் இடையிலான கடல் பகுதியும், தெற்கில் யாழ்ப்பாண கடல் நீரேரியும் தெற்கில் ஒரு பகுதி தென்மராட்சிப்பிரிவும், கிழக்கில் வடமராட்சிப்பிரிவும் எல்லைகளாக அமையப்பெற்றுள்ளன. குடாநாட்டின் வளம்மிக்க பகுதிகள் பெரும்பாலும் வலிகாமத்திலேயே அமையப்பெற்றுள்ளன. யாழ்ப்பாண அரசர் காலத்திலிருந்தே இப்பகுதி ஒப்பீட்டளவில் அதிக மக்கள் தொகையைக் கொண்டதாகவும், மக்கள் அடர்ந்து வாழும் பகுதியாகவும் விளங்கி வந்திருக்கின்றது. பண்டைக்காலத்தில் முக்கிய நகரமாக விளங்கியதாகக் கருதப்படும் **"கதிரைமலை"** என அழைக்கப்படும் கந்தரோடையும், பிற்கால யாழ்ப்பாண அரசின் தலை நகரமான **"நல்லூரும்"** வலிகாமப் பகுதியிலேயே அமையப்பெற்றுள்ளன (ta.m.wikipedia,org).

இத்தகைய சிறப்புப் பின்னணியினைக் கொண்ட வலிகாமத்தின் ஒரு பிரிவாக விளங்கும் வலிமேற்குப் பிரதேசமே இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது. வலிமேற்குப் பிரதேசமானது சுழிபுரம், பண்ணாகம், பனிப்புலம், பொன்னாலை, தொல்புரம், வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, மூளாய், சங்கரத்தை, அராலி போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்திலுள்ள இந்துப்பண்பாட்டு சுற்றுலாவிற்குரிய இடங்களினை அடையாளங்கண்டு அவற்றை வெளிக்கொண்டு வருவதாகவே இவ்வாய்வானது அமைகின்றது.

## வலிகாமம் மேற்கில் அமையப்பெற்றுள்ள இந்து கலாசார சுற்றுலா மையங்கள்

யாழ்குடா நாட்டின் ஒரு பகுதியாக அங்கம் வகிக்கும் வலிமேற்கில் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலா, மரபுரிமைச்சுற்றுலா மையங்களாக பல காணப்படுகின்றன. அந்தவகையில் இந்துப்பண்பாட்டின் நிலைக்களன்களாக விளங்கும் இந்து ஆலயங்களும் பண்பாட்டுச் சுற்றுலாவியலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்தவகையில்,

1. சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயம்
2. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம்
3. திருவடி நிலை புனிதத்தீர்த்தம்
4. துணைவி புராதன ஆலயம்
5. சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரம்

என்பன விளங்குகின்றன. இவற்றுடன்,

1. சங்கரத்தை அம்பலங்கள்
2. சித்தன்கேணியில் அமையப்பெற்றுள்ள மருத்துவக்கேணி

போன்ற மரபுரிமைச்சுற்றுலா மையங்களும் இங்கு ஆய்வு செய்யப்படுகின்றன.

## சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயம்

யாழ்ப்பாணப்பட்டினத்துக்கு வடமேற்கில் சமுத்திரக்கரைக்குச் சமீபத்தில் தொல்புரம், சோழியபுரமென இரண்டு ஊர்கள் இருக்கின்றன. இரண்டுக்கும் இடையிலுள்ள தூரம் ஒரு மைல். தொல்புரமென்பது பழைய ஆசாரங்களை அநுட்டித்தவர்கள் இருந்ததினால் வந்த பெயரென்றும், சோழியாபுரமென்பது இந்தியாவிலிருந்த சோழியர் இருந்ததினால் வந்தபெயரென்றும், சோழியபுரம் சுழிபுரமென மருவியதென்றும் சொல்லுகிறார்கள். சுழிபுரம் முற்காலத்தில் செந்தமிழ்க்கல்விக்கும் சைவாசாரத்திற்கும் உறைவிடமாக இருந்தது. இந்தச் சுழிபுரத்திலுள்ளது பறாளாய் என்னும் இடம். பறாளாய் என்பது பறாளை என மருவியது. (ஜம்புலிங்கம் பிள்ளை,வே.வெ., 1889:7)

சுழிபுரம் கிராமத்தின் (J/174) வயல்சூழ்ந்த மருத நிலப்பகுதியில் கிழக்கு நோக்கிய சந்நிதியாக இலங்கையின் புராதன ஆலயமான பறாளை விநாயகா் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இது யாழ்ப்பாண அரசுக்காலத்திற்குரிய ஆலயமாகக் விளங்குகின்றது. இவ்வாலயத்திற்கு வடக்கு வீதியுடன் பறாளை முருகன் ஆலயமும் அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பறாளை விநாயகா் ஆலயம் பற்றிய செய்திகள் நல்லூா் சின்னத்தம்பிப்புலவரால் எழுதப்பட்டுள்ள பறாளாய் விநாயகா் பள்ளு எனும் நூலில் இடம்பெற்றுள்ளது. இப்பள்ளுப்பிரபந்தமானது இவ்வாலயத்தின் பழைமையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றது.

தமிழரசா் காலத்தில் கட்டப்பட்டிருந்த இவ்வாலயத்தினை போா்த்துக்கேசா்கள் இடித்தழிக்க வந்தபோது விநாயகா் காக்கை உருக்கொண்டு அவா்களது கண்களைக் கொத்தி அம்முயற்சியைத்தடுத்தருளினாா். இதனால் இந்தப்பிள்ளையாருக்கு “கண்ணைக் கொத்தி காக்கைப்பிள்ளையாா்” என்று பெயா் வழங்கலாயிற்று (ஜம்புலிங்கம் பிள்ளை,வே.வெ., 1889:7). இவற்றுடன் இந்த ஆலயத்தின் தோ் 500 ஆண்டுகளுக்கு முன்னா் அமைக்கப்பட்டதாக ஆய்வாளா்களால் கூறப்படுகின்றது.

**பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம்**

யாழ்மாவட்டத்தின் மேற்குத்திசையில் பொன்னாலைக்கிராமத்தில் (J/170) வரதராஜப் பெருமாள் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இத்தலத்தின் அமைவிடம் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> “யாழ்ப்பாணத்தின் மேற்குத்திக்கில் நீா் நிறைந்த குளங்களும் வயல்களும் முன்னே இருக்கவும், உவா் நீா்கடலும் சமுத்திரமும் தெற்குமேற்கு திசைகளில் பொருந்தவும் பெற்றதாய் இவற்றுக்கு நடுவண் சதுரங்கமென்னும் மணற்பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்விய தலம் இருக்கிறது. ஆலயத்திற்கு முன்னே குறுக்காகச் செல்லும் தெருக்கரை மாா்க்கமாகப் பருத்தித்துறைக்குப் போகலாம். ஆலயத்துக்கு முன் (கிழக்கு மேற்காகச்) செல்லும் மண்தெரு, மூளாய் மாா்க்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பிரசித்திமான தெருவைச் சந்திக்கின்றன.”

(கணபதிப்பிள்ளை,பெ., 52)

இந்திரனின் சாபத்தைப் போக்க கிருஷ்ணர் கூர்ம அவதாரம் எடுத்த கூர்ம அவதாரத்தலமாக இவ்வாலயம் சிறப்பிக்கப்படுகின்றது. இவ்வாலயம் பற்றிய வரலாறு தக்ஷண கைலாய புராணத்தில் “பொன்னாலை பெருமை உரைத்த படலம்” என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது. சிங்கள நூலாகிய கோகில சந்தேசத்திலும் இந்த ஆலயம் பற்றிய செய்திகள் உண்டு. குளக்கோட்ட மன்னன் இந்த ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்தான் என்பதனை இலக்கிய

ஆதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. அவனால் அமைக்கப்பட்ட ஏழு சுற்றுப்பிரகாரங்களும் பின்னே ஒல்லாந்தரால் இடித்தழிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போது சீரிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக் கின்றது. தற்போது இரு பிரகாரங்களே உள (கணபதிப்பிள்ளை,பெ., 55).

இத்தலத்திற்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

சுவர்ணாலயபுரி: இந்திரன் வசிக்கப்பெற்றதனாலும் இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றியபடியாலும் இப்பெயர் பெற்றது (கணபதிப்பிள்ளை,பெ., 52)

சதுரங்கம்: ஆலய உற்பத்தி காலத்தில் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ்விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணுவுக்குப் பிரீதியாக அமைந்த தலப்பெயர். பரத நாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப் பல அங்கங்கள் உள (கணபதிப்பிள்ளை,பெ., 52)

பொன்னாலயம்: முன்னொரு காலத்தில் விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்தலம் இது. பொன்னென்னும் பல பொருளொரு சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம், பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு காலத்துப் பொன்னால் அமைந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர். (கணபதிப்பிள்ளை,பெ., 53)

வேண்டியவர் வேண்டிய வரங்களை வரையாது கொடுத்தலினால் இவ்வாலய மூர்த்திக்கு “வரதராசர்” என்னும் திருநாமம் வழங்கப்படலாயிற்று. இவ்வாலயத்தில் ஆதி விட்டுணு கூர்ம சிலை மிகவும் சிறப்பானதாகும். இதுவே வலைஞன் வலையிட்டு இழுத்தபோது கல்லாக அமைந்த பழமையான ஆமை உருவமாகும். இச்சிலை ஆலயத்தின் அர்த்த மண்டபத்தில் அமையப்பெற்றுள்ளது (கணபதிப்பிள்ளை,பெ., 54). கூர்மாவதார மூர்த்திக்குப் பூசை இடம் பெற்ற பின்பே மூல மூர்த்தியாகிய வரதராசப்பெருமானுக்கு பூசை நிகழும்.

## திருவடி நிலை புனிதத்தீர்த்தம்

சுழிபுரம் கிழக்குப்பகுதியில் (J/174) இப்புனித இடம் அமையப் புகழ் பெற்றிருந்தமையை அறியமுடிகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள புனிதத்தலங்களில் பிதிர்க்கடன் செலுத்துவோரின் புனிதத்தீர்த்தத் தலமாக விளங்கும் இது, கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்து புகழ் பெற்றிருந்தமையை அறிய முடிகின்றது.

“இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் 27 மைல் அகலங்கொண்டபாக்கு நீரிணைக் கடல் இருக்கிறது. இப்பாக்கு நீரிணைக்கடலின் வடகோடியிலும் தென்கோடியிலும் ஸ்ரீ

இராமபிரான் அடிச்சுவடுகள் உண்டென்பா். வடகோடி வேதாரணியம் கோடிக்கரை (தீா்த்த ஸ்தான விசேஷம்) தென்கோடி சுழிபுரம் திருவடி நிலை (தீா்த்தஸ்தான விசேஷம்)"

(சேதுகாவலப்பிள்ளை,சி., 195:2).

திரேதா யுகத்தில் ஸ்ரீ இராமபிரான் இராவண சம்ஹாரம் செய்யும் பொருட்டு சுழிபுரத்தில் உள்ளதும் பிற்காலம் திருவடி நிலையென்னும் காரணப்பெயரால் அழைக்கப்பெறுவதுமாகிய ஸ்தலத்தில் இறங்கி, தன் அடிச்சுவடு பதித்துள்ளாா் எனப்படுகின்றது. இராமபிரான் அடிச்சுவடு பதித்த இடம் தீா்த்த விசேடம் என்பதனை அறிந்த சோழ குமாரத்திகள் எழுவா் திரவியத்தோடும், பரிவாரத்தோடும் திருவடிநிலைக்கணித்தாயுள்ள சம்பில் துறையில் வந்திறங்கினா். பின் அருகிலுள்ள திருவடி நிலைச் சமுத்திரத்தில் தீா்த்தமாடி மூலக்கருத்துணரப்பெற்றவா்களாய் அதிலோா் சிவாலயமெழுப்பிச் (சம்பு-சிவன், இல்- ஆலயம்) சமீபத்திலுள்ள மழுவை என்னும் இடத்தில் தாங்கள் வசித்ததற்காக மாடமாளிகைகளைக்கட்டி வசித்தனா். (திசைமழுவனென்னும் சிற்றரசன் ஆட்சி செய்த இடமே மழுவையாகும். தற்போது மழுவைக்காடு என்று அழைக்கப்படுகிறது. இந்த இடத்தில் திசை மழுவன் காலத்தில் விளங்கிய "சம்பேசுரன்" என்னும் சிவாலயம் இருந்த இடம் அழிந்து கிடப்பதனை இப்போதும் காணலாம்.) பின்னா் சற்று சமீபத்திலுள்ள மருத நிலங்களாற் சூழப்பெற்றதும் நீா்வளம் பொருந்தியதாயுமுள்ள பறாளையில் தாங்களும் தங்கள் பரிவாரங்களும் ஸ்நானம் செய்வதற்கு ஏழு கூபங்கள் தோண்டினாா்கள் என்று கா்ணாரம்பரைக்கதையுண்டு. தற்க்காலம் ஏழு கூபங்களும் ஒருங்கு சோ்க்கப்பெற்றுபின் தாமரைத்தடாகமாக முருகமூா்த்தி கோவிலின் வடபுறத்தில் இரண்டாம் வீதியில் திகழ்வதைக் காணலாம் (சேதுகாவலப்பிள்ளை,சி., 1958:3).

பண்டைக்காலத்தில் "திருவடி நிழல்" எனும் பெயருடன் இது காணப்பட்டது. அதாவது இராமபிரானின் திருவடிகள் இங்கு பதிந்ததால் "திருவடி நிழல்" என்று பெயா் பெற்றதாகக் கூறப்படுகின்றது. காலப்போக்கில் இப்பெயா் மருவி, "திருவடி நிலை" என அழைக்கப்படலா யிற்று. கி.பி 14 ஆம் நுற்றாண்டில் எழுதப்பட்ட நம்பொத்த என்ற சிங்கள நூலில் திருவடி நிலை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இத்தலம் யாழ்ப்பாணத்துக் கீரிலைபோல மூா்த்தி, தல, தீா்த்த விசேடங்கள் பெற்றது. இங்கே தான் பறாளாய் விநாயகா், முருகன் கோயில்களின் தீா்த்த உற்சவமும் பொன்னாலைக் கிருஷ்ணன் கோயில் தீா்த்த உற்சவமும் கொண்டாடப்படுகின்றன.

### துணைவி புராதன ஆலயம்

துணைவி புராதன ஆலயம் சங்கரத்தையில் (J/159) அமையப்பெற்றுள்ள ஒரு கற்கோவிலாகும். ஆலயத்தின் பெரும்பகுதி கோறல் கற்கள் கொண்டே கட்டப்பட்டுள்ளது.

கருவறை மட்டும் பொழிந்த முருகைக்கற்களையும், சுண்ணாம்புக்கற்களையும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வாலயம் கி.பி 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வாலய கர்ப்பக்கிருகச் சுவரிலே கிரந்த எழுத்துக்களிலான கல்வெட்டுக்கக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முன்னைய காலத்தில் இவ்வாலயம் “பிரகேஸ்வரன்” என்ற பெயரில் அழைக்கப்பட்டதாக கல்வெட்டுக்களை ஆராய்ந்த இந்திய சாசனவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரம்**

சம்பில்துறை சம்புநாத ஈஸ்வர ஆலயமானது சுழிபுரம் கிழக்குப்பகுதியில் (J/174) அமையப்பெற்றுள்ளது. இவ்வாலயத்தில் 21 அடி உயரமான சிவனின் சிலை ஒன்று காண்பவரை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவே யாழ்ப்பாணத்தின் உயரமான சிவன் திருவுருவமாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். இச்சிலையானது சைவ மகாசபையின் சிவத்தொண்டர் அமைப்பினரால் 2013 இல் அடிக்கல் நாட்டப்பெற்று, 2014 இல் திருக்குடமுழுக்குச் செய்யப்பட்டதாகும். இலங்கையில் முதன்முதலில் செந்தமிழில் திருக்குடமுழுக்குக்கிரியைகள் இவ்வாலயத்திலேயே நடைபெற்ற சிறப்பினையும் உடையதாகக் காணப்படுகின்றது.

**சங்கரத்தை அம்பலங்கள்**

சங்கரத்தைப் பிரதேசத்தில் (J/159) அமையப்பெற்றுள்ள ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, மடம், கிணறு/கேணி இந்நான்கும் முன்னைய காலத்திலிருந்து “அம்பலங்கள்” என்று அழைக்கப்பட்டுவருகின்றன. இவ்வம்பலங்களானவை வீதியால் பயணம் செய்யும் வழிப்போக்கர்கள், வர்த்தகர்கள் மற்றும் ஆநிரைகளின் களைப்பினைப் போக்குவதற்காகவே பண்டைக்காலத்தில் அமைக்கப்பெற்றுள்ளன. இத்தகைய பண்பாட்டு மரபானது ஒல்லாந்தர் காலத்திருந்து வளர்ச்சியடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுடன் வலிமேற்கில் சங்கப்படலை என்னும் மரபுரிமைச்சின்னமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வதிவிட முறைகளில் பயன்படுத்தப் பட்டுள்ள வாயில் அமைப்பு முறைகளில் சங்கப்படலை முறையும் ஒன்றாகும். வீடுகளின் பிரதான வாயிலில் மேற்கூரை அமைக்கப்பட்டு பிரதான படலையின் இரு பக்கமும் இரு திண்ணைகள் அமைந்தவகையில் அமைக்கப்பட்டிருக்கும். இதுவும் வீதியில் செல்வோர் சற்றுக் களைப்பாறிச் செல்வதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது.

**சித்தன்கேணியில் அமையப்பெற்றுள்ள மருத்துவக்கேணி**

இக்கேணி சித்தன்கேணி (J/177) பகுதியில் அமையப்பெற்றுள்ளது. பாம்பு தீண்டி எவரும் உயிர் நீக்காத வகையில் சித்தர்களால் விசக்கல் புதைக்கப்பட்ட கேணியாகவும், அவர்களால் பூசிக்கப்பட்ட கோயில் சிவன் கோயிலாகவும் உள்ளது. இதனால் தான் இவ்விடம் சித்தன்கேணி என அழைக்கப்படலாயிற்று.

**பகுப்பாய்வு**

மக்களால் விரும்பி மேற்கொள்ளப்படுகின்ற சுற்றுலாவகையாக பண்பாட்டுச் சுற்றுலாவானது காணப்படுகின்றது. குறிப்பாக இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாவினை எடுத்துக்கொண்டால், ஆன்மிகமும் பண்பாடும் தழைத்தோங்கும் எமது அயல் தேசமாகிய இந்தியாவில் மிகவும் சிறப்படைந்து காணப்படுகின்றது. இங்கு காணப்படும் புராதன வரலாற்றுடன் தொடர்புடைய இந்து ஆலயங்கள், பண்பாட்டு வாழ்வியலுடன் தொடர்புபடும் பிரசித்தமான இடங்கள் சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பனவாகக் காணப்படுகின்றன. இலங்கையிலும் பண்பாட்டுச் சுற்றுலாவினை மேற்கொள்பவர்களைக் கவரும் பிரதேசமாக யாழ்ப்பாணம் இருந்து வருகின்றது. இருப்பினும் சில இடங்கள் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாவியலுக்கு ஏற்றதாக இருந்தாலும், அவை மக்கள் மத்தியில் பிரசித்தமில்லாதவையாக காணப்படுகின்றமை மிகவும் வருந்தத்தக்க விடயமாகும். இதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே யாழ் வலி மேற்குப் பிரதேசத்தில் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாவிற்குரிய இந்து ஆலயங்கள், மரபுரிமைச்சின்னங்கள். வரலாற்றுக்கதைகளுடன் தொடர்புடைய இடங்கள் (சுழிபுரம், பொன்னாலை, சம்பில்துறை) போன்றன இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றினை இந்துப்பண்பாட்டுச் சுற்றுலா மையங்களாக, சுற்றுலாப்பயணிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதனூடாக, இப்பிரதேசங்களின் பண்பாட்டு வரலாற்றினை மக்கள் அறிந்து கொள்வது மட்டுமல்லாது சுற்றுலாத்துறையினூடாக பெருமளவிலான வருவாயினையும் ஈட்டிக்கொள்ளமுடியும். இவற்றுடன் இவ்வலிமேற்குப்பிரதேசத்தை அண்டிய பகுதியில் சுற்றுலாப்பயணிகளை கவரும் கசூரினா கடற்கரையானது காணப்படுகின்றது. பெருமளவான சுற்றுலாப்பயணிகள் தமது விடுமுறைக் காலங்களில் அங்கு சுற்றுலாப்பயணங்களினை மேற்கொள்கிறார்கள். இச்சுற்றுலாப் பயணத்தின்போது பண்பாட்டுச்சுற்றுலாவில் ஈர்ப்புடையவர்கள், வலிமேற்குப் பிரதேசத்தின் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலா மையங்களினை அடையாளங்கண்டு அவற்றை பார்வையிடுவதற்கு வழிசமைப்பதாக இவ்வாய்வானது அமைகின்றது. இவ்வாய்விலே இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாவுடன் தொடர்புடைய பண்பாட்டுச் சின்னங்களையும், அவை பற்றிய வரலாறுகளையும் அறிந்துகொள்வதில் சற்று சிரமம் காணப்பட்டது. இவ்வாறு எம்மண்ணில் மறைமுகமாக இருக்கும் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலா மையங்களினை, சுற்றுலாப்பயணிகளை கவரும் வண்ணம் பேணிப்பாதுகாப்பதனூடாக எதிர்காலச்சந்ததியினரும் அதன் பெருமையினை உணர்ந்து கொள்ள தூண்டுவதாக

இவ்வாய்வானது அமைகிறது. இதன் மூலம் எம்நாட்டின் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாவியலானது வளர்ச்சியடைவதுடன், எம்மண்ணின் பெறுமதிமிக்க பண்பாட்டு வரலாற்றினை யாவரும் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கப்பெறுகிறது.

## உசாத்துணை


இரகுபரன், க., (பதி) (2005), நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் பிரபந்தங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

கணபதிப்பிள்ளை,க., (1984), பறாளை விநாயகர் ஊஞ்சல், சுழிபுரம் இந்து இளைஞர் சங்க வெளியீடு, சுழிபுரம்.

கணபதிப்பிள்ளை,பெ., பொன்னாலய மகாத்மியம், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.

சந்திரசேகரம்,செ., முகமட் முஸ்தபா, ஏ.எம்., சசிவதனி,த., (2013) சுற்றுலாப் பொருளியலுக்கு ஓர் அறிமுகம், Economic Forum, South Eastern University of Sri Lanka, இலங்கை.

சிவேசன்,எஸ்., (2018), சுற்றுலா கற்கைகள் ஓர் அறிமுகம், லங்கா புத்தக சாலை, கொழும்பு.

சேதுகாவலப்பிள்ளை,சி., (1958), சுழிபுரம் பறாளைத் தல மகிமை, சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய ஸ்காந்தத்தில் உள்ள தஷிண கைலாச புராணத்திலிருந்து எடுத்து எழுதப்பெற்ற பொன்னாலய மகாத்மியம், ஸ்ரீ பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.

வலிமேற்குப் பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கையேடு.

ஜம்புலிங்கம் பிள்ளை,வே.வெ., (1889), பறாளாய் விநாயகர் பள்ளு, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை.